ஊர்காவற்றுறை மேலைக்கரம்பன்பதி

முருகக்கடவுள்

# திருவூஞ்சல்



திரு. க. சோமசுந்தரப் புலவர்

உ

திருச்சிற்றம்பலம்

ஊர்காவற்றுறை மேலைக்கரம்பன் திருப்பதி

முருகக்கடவுள்

# திருவூஞ்சல்

முதலியன

இவை

நவாலியூர்

திரு. க. சோமசுந்தரப் புலவர் அவர்களாற்

பாடப்பட்டு,

ஊர்காவற்றுறை மேலைக்கரம்பன்

கு. ல. சபாநாதனால்

வெளியிடப்பட்டன.

1941

திருமகள் அழுத்தகம்,
சுன்னாகம்.

உ

திருச்சிற்றம்பலம்

# முகவுரை

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே—யொருகைமுகன்
றம்பியே நின்னுடைய தண்டைக்கா லெப்பொழுது
நம்பியே கைதொழுவே னுன்.

ஊர்காவற்றுறைப் பகுதியைச் சார்ந்த மேலைக்கரம்பனில் உள்ள முருகக்கடவுள் கோயில் மிகப் பழமையானதாகும். இத் தகைய பழமையும் சிறப்பும் வாய்ந்த கோயிலில் வீற்றிருக்கும் முருகக் கடவுள்மீது இதுவரை ஊஞ்சற் பதிகம் பாடி எவரா வது வெளியிட்டதாகத் தெரியவில்லை. சிறந்த புலவர்களைக் கொண்டு இப் பெருமான்மீது ஊஞ்சல், உலா, பிள்ளைத்தமிழ் முதலிய நூல்களைப் பாடுவித்து வெளியிடவேண்டு மென்ற வேணவா எமக்கு நெடுங்காலமாகவிருந்தது.

இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் முருகக் கடவுள்மீது ஓர் ஊஞ்சற்பதிகம் பாடித் தரும்படி, முருகன் அருள் பெற்றுத் திகழும் நவாலியூர் திரு. சோமசுந்தரப்புலவர் அவர்களை வேண் டினேன். புலவர் அவர்கள் ஊஞ்சற் பதிகத்தைப் பாட ஒருப் பட்டதுமன்றிச் சிறுரும் முருகன் திருநாமங்களைப் பயின்று வருதல் இன்றியமையாது என்று அறிவுறுத்தி, அவர்கட் காகவும் சில செய்யுள்கள் பாடி யனுப்புவதாகவும் கூறினுர்கள். பல வேலைகட்கிடையில் அடியேனையும் ஒரு பொருளென மதித்துப் புலவர் அவர்கள் பாடியீந்த பேருதவிக்கு இப் பெருந் தகையாளரை வாழ்த்தி வணங்குவதன்றி 'யான் இதற்கிலன் ஓர் கைம்மாறே.'

புலவர் அவர்களை நினைக்கும்போதெல்லாம்,

> ' திருமுடி மிசையார் மயிர்முடி யழகுந்
> தீர்க்கபுண் டரநுத லழகும்
> திரண்மணி புயந்தை வருஞ்செவி யழகும்
> திகழ்நெடுந் தாடியி னழகும் '

என் அகக்கண்முன் காட்சியளிக்கின்றன. புலவர் அவர்களை முதன்முதல் அவர்களுடைய இல்லின்கட் சென்று யான் கண்ட காட்சி என்றும் மறக்கமுடியாது. புலவரவர்கள், ' மனைத்தக்க மாண்புடைய ளாகித் தற்கொண்டான், வளத்தக்காள் வாழ்க்கைத் துணை ' யுடன், முகத்தான் அமர்ந்தினிது நோக்கி யகத்தான் இன்சொற் கூறி அளவளாவிச் செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருக்கும் காட்சி எத்தகையர் மனத்தினும் எளிதிற் படிந்துவிடும் வனப்புடையது.

> ' உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
> வாக்கினிலே ஒளியுண்டாகும் '

எனப் பாரதியார் காட்டியவாறு, புலவர் அவர்கள் எளியநடையில் ஆழ்ந்த கருத்தைப் பொதிந்து பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடும் இயல்பு இயற்கையிலேயே வாய்க்கப் பெற்றவர் என்பது யாவரும் நன்கறிந்ததொன்று. புலவரவர்களது செய்யுளியற்றும் திறனைப்பற்றியாதல் செய்யுட் சிறப்பைப் பற்றியாதல் ஈண்டெடுத்து விளக்கல் மிகை. கரம்பன் வாழ்நர்களேயன்றி முருகன் அடியாராகிய ஏனையோரும் ஓதிப் பயின்று துதிக்கக்கூடிய முறையில் ' முருகன் திருநாமப் பாட்டு ' அமைந்துளது. ஈழநாட்டு முருகன் கோட்டங்கள் யாவும் பெரும்பாலும் கூறப்பட்டிருத்தலும் கருதற்பாற்று. இதனைத் திருவிழாக்காலங்களிலும் மற்றைப் பெருநாட்களிலும் முருகப்பெருமான் உலாப் போதரும்போது அடியார்கள் பின்தொடர்ந்து ஓதிச் செல்லலாம். அன்றியும் சைவப் பாடசாலை மாணவர்கள்

பொதுவாக நாடோறுமாவது வெள்ளிக்கிழமைதோறுமாவது இதனைப் பாராயணஞ் செய்துவருதல் நன்று.

இத் திருக்கோயில் எங்கள் வீட்டுக் கண்மையிலுள்ளது. முருகக் கடவுளே எங்கள் குடும்பத்துக்குக் குலதெய்வமாகும். விக்கிரம ஆண்டு தைத் திங்கள் உ௪-ந் தேதி (6–2–41) தசமித் திதியன்று இவ்வுலக வாழ்வு நீத்த எந்தையார் (**சி. கா. குலசேகரம்பிள்ளை**) இப் பெருமான்மீது பத்திபூண்டவராய் வாழ்ந்தார். நல்குரவென்னும் தொல்விடம் தீண்டப்பட்டுப் பல இன்னலுற்றிருந்த வக்காலையும் எம்மைப் பேணி வளர்க்கும் கடமைபூண்டொழுகிய எந்தையாரை நினைப்பூட்டுதற்பொருட்டாக இந்நூலை அச்சிட்டு வெளியிடுகின்றேன்.

இதனை அன்பர்கள் ஓதி முருகன் திருவருள்பெற் றுய்வார்களாக.

"அஞ்சு முகந்தோன்றி லாறு முகந்தோன்றும்
வெஞ்ச மரந்தோன்றில் வேலோன்றும்—நெஞ்சி
லொருகா லினைக்கி லிருகாலுந் தோன்று
முருகாவென் றோதுவார் முன்.

உன்னை யொழிய வொருவரையு நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே."

இங்ஙனம்,

**குல. சபாநாதன்**

**ஊர்காவற்றுறை,**
**மேலைக்கரம்பன்,**
விசு ஆண்டு ஆடித்திங்கள் அ-ந் தேதி
அமாவாசைத்திதி (23–7–41)



திருச்சிற்றம்பலம்



## ஊர்காவற்றுறை மேலைக்கரம்பன் திருப்பதி

# முருகக்கடவுள் திருவூஞ்சல்

### காப்பு

மங்களகோ மளஞான வல்லி புல்லும்
மருத்துமலை திருக்குளத்து நெருப்பிற் றோன்றி
அங்கமல சரவணப்பூந் தொட்டி லேறி
ஆறுமுகங் கொண்டெழுந்த வமரர் கோமான்
மங்குறவழ் தண்டலைசூழ் கரம்பன் மேவும்
வரமுருகன் மதுரமொழி யூஞ்சல் பாடச்
செங்கனகச் சிலம்பினிற்பா ரதப்போர் தீட்டுஞ்
சித்திபுத்தி விநாயகன்றாள் சென்னி சேர்ப்பாம்.

### நூல்

செந்தமிழா ரியமறைகள் தூணாய் நாட்டிச்
சிவகலைசித் தாந்தகலை விட்டம் பூட்டி
முந்துமிரு மொழிவழிநூ லிழைகள் மாட்டி
மூலநிலை யோங்கார பீடம் கூட்டித்

தந்தமணி மந்திரப்பொன் னூஞ்சன் மீதே
தாயருட னுலகமெலாந் தழைய வேறி
அந்தணரா குதிவளஞ்சேர் கரம்பன் மேவும்
ஆறுமுக வேலவரே யாடீ ரூஞ்சல். 1

திருமாலும் மலரயனுங் குடைகள் தாங்கத்
திசைமேவும் வளியரசர் கவரி வாங்க
உருமேவு மனலிமணித் தீபம் நீட்ட
ஒலிமேவு விசும்பிறைவன் தூப மூட்டத்
தருமேவு மளகையர்கோன் அடைப்பை காவச்
சலமேவு புனலரசன் பனிநீர் தூவ
அருமாலுந் துயருமழி கரம்பன் மேவும்
ஆறுமுக வேலவரே யாடீ ரூஞ்சல். 2

பேரியலுந் தூரியங்கள் கணங்கள் தூக்கப்
பெயரியலும் பானுகம்பன் சங்க மார்க்க
வாரிவடித் துந்திமுனி மணியாழ் மீட்ட
மலயமலைத் தமிழ்முனிவன் மதங்கங் கூட்டச்
சீரியலுங் கந்தருவர் இசைகள் பாடத்
தெய்வமட மங்கையர்கள் நடன மாட
ஆரியலும் அருள்வளஞ்சேர் கரம்பன் மேவும்
ஆறுமுக வேலவரே யாடீ ரூஞ்சல். 3

விரியுமொளி தரவிழைவோர்க் கருளை யீய
வேதவிதி யந்தணர்கள் வேள்வி யோர்க்கத்
தெரிவரிய பொருடெரிக்கத் தீமை தீர்க்கச்
சிறியநகை புரியவமை முகங்க ளாறும்

உரிமைபுரி யாறிரண்டு தோளுந் தாளும்
ஓங்கார வொளியுருவு மயிலும் வேலும்
அரிவையர்கள் பாகமுமாய்க் கரம்பன் மேவும்
ஆறுமுக வேலவரே யாடீ ரூஞ்சல். 4

மருவுமருட் புனலாட்டி யானைந் தாட்டி
மங்கலமஞ் சனவகைகள் மகிழ்வி னூட்டித்
திருமருவொற் றுடையணிந் தலருஞ் சாத்தித்
தெய்வமணிக் கலன்பூட்டித் தெரியல் சூட்டி
வருமுறைமை வழிபாடீ ரெட்டுந் தந்து
வழியடிய ரருவினைநோய் மாற்றப் போற்றும்
அரகரமந் திரவொலிசேர் கரம்பன் மேவும்
ஆறுமுக வேலவரே யாடீ ரூஞ்சல். 5

மோனபரா னந்தமெனும் முடிக ளாட
முழுவதிலுஞ் சிவந்தோற்றும் முகங்க ளாடக்
காணவெலா மறிதலெனுங் கண்க ளாடக்
கரையிறந்த வாற்றலெனுங் கரங்க ளாட
ஞானவயில் வேலாட மயிலு மாட
நானெனதில் லாவடியுங் கொடியு மாட
ஆனையுடன் மானுடக் கரம்பன் மேவும்
ஆறுமுக வேலவரே யாடீ ரூஞ்சல். 6

மூன்றொடுபின் னுகுநிலை யூஞ்சல் காட்ட
முத்துயருங் கெடுக்குமுறை முறுவல் காட்ட
என்னெனினும் வழங்குமியல் வரதங் காட்ட
யாதுமஞ்ச லென்னுமிய லபயங் காட்ட

மன்னுவினை யில்லையெனல் வடிவேல் காட்ட
மறைவுதொழில் மயில்காட்ட மடவா ரோடும்
அன்னவரு ளுருக்காட்டிக் கரம்பன் மேவும்
ஆறுமுக வேலவரே யாடீ ரூஞ்சல். 7

சங்கரனார் நெற்றிவிழி தருதல் பாடிச்
சண்முகனாய் விளையாடி வருதல் பாடிப்
பங்கயனைக் கொடுஞ்சிறையிட் டெடுத்தல் பாடிப்
பண்ணவர்க்குப் பெருவாழ்வு கொடுத்தல் பாடி
மங்கையரை யாட்கொண்ட வண்ணம் பாடி
வாகுவுக்கு மெய்யன்பு வழங்கல் பாடி
அங்கணடி யவர்பரவக் கரம்பன் மேவும்
ஆறுமுக வேலவரே யாடீ ரூஞ்சல். 8

இருண்மூல வாணவச்சூ ரிடித்தா யென்றும்
இருவினைவா ளரிமுகனை முடித்தா யென்றும்
மருண்மாயை மதகரியை மடித்தா யென்றும்
வானவர்கள் துயர்க்கடலைக் குடித்தா யென்றும்
தெருண்மேவு மடியவரையாட் செய்தா யென்றும்
திருவருட்பே ரின்பமழை பெய்தா யென்றும்
அருண்மேவு புலவர்துதி கரம்பன் மேவும்
ஆறுமுக வேலவரே யாடீ ரூஞ்சல். 9

செங்கணரி யயனிருவர் தெரியா ஞானத்
தீக்கொழுந்திற் பூத்தசிவக் கொழுந்தே போற்றி
பொங்குமருட் கடல்வருபுத் தமுதே போற்றி
பூங்கடம்பு புனைந்தமணி மார்பா போற்றி

சங்கமணித் தவிசிருந்த தலைவா போற்றி
சற்குருவே போற்றியென்று சாற்றிப் போற்ற
அங்கமல வாவிபொலி கரம்பன் மேவும்
ஆறுமுக வேலவரே யாடீ ரூஞ்சல்.

## வாழி

பூவாழி பொன்னின்மழை பொழிந்து வாழி
பூதிகண்டி யைந்தெழுத்தும் பொலிந்து வாழி
சேவாழுஞ் சிவன்வாழி யுமையாள் வாழி
சித்திபுத்தி விநாயகனுஞ் சிறந்து வாழி
பாவாழ மயில்வாழி திருவும் வாழி
பாவுதமி ழூஞ்சலிசைப் பதிகம் வாழி
ஆவாழி யறம்வாழி கரம்பன் மேவும்
ஆறுமுக வேலவரும் வாழி வாழி.

## எச்சரிக்கை

மருவார்மல ரளிசூழ்பொழி லெழிலார்கரம் பனில்வாழ்
முருகாவரி மருகாமயிற் குருகாவெச்ச ரிக்கை

நாதப்பரி புரசுந்தர வீரக்கழ லிணைகள்
ஓதத்தமி ழறிவைத்தரு மொருவாவெச்ச ரிக்கை

ஆதிப்பர சிவனுர்செவி யயனுரறி யாத
வேதப்பொருள் மறைவாயுரை விமலாவெச்ச ரிக்கை

அமரைச்சிறை புகவைத்தயர் துயரைத்தரு மசுரைத்
தமரக்கட னடுவிற்றெறு தலைவாவெச்ச ரிக்கை.

## பராக்கு

ஆறுமுக ஞானவடி வேலாப ராக்கு
ஆதியுமை மாதுதரு பாலாப ராக்கு
ஏறுமயி லேறுதண் டைக் காலாப ராக்கு
ஞானவர மீயுமனு கூலாப ராக்கு 1

மங்கையரி ருவர்மண வாளாப ராக்கு
வலியவினை மாற்றுமணித் தோளாப ராக்கு
கங்கைசுத கார்த்திகைநன் ஞளாப ராக்கு
கனகமணித் தண்டையணி தாளாப ராக்கு. 2

ஒன்றெடிரண் டைங்தொடையைந் தாணுய்ப ராக்கு
ஓங்கார மூலவொளி யாணுய்ப ராக்கு
குன்றுகடல் சூருமழ வென்றுய்ப ராக்கு
குமரகுரு பரமுருக வெந்தாய்ப ராக்கு. 3

## லாலி

ஐந்துமுகர் தந்தசிவ போதலாலி—அருள்
ஆறுமுக மானகுரு நாதலாலி
தந்திமுகர் சிந்தைமகிழ் தம்பிலாலி—சிவ
சரணபத யுகளமருள் நம்பிலாலி.

### வேறு

ஐயலாலி யருண் மெய்யலாலி மலர்க்
கையலாலி யொளிர் செய்யலாலி
ஆதிலாலி நிறை நீதிலாலி மறைச்
சோதிலாலி யருட் பூதிலாலி.

## மங்களம்

மங்களம் மங்களமே—என்றும்
மங்களம் மங்களமே

வெங்கலியு கத்தினிலே யெங்களுக்க ருள்புரியும்
வெற்றிமயில் வீரனுக்கு நற்கரம்ப னாரனுக்கு
—மங்களம்

சூரசங் காரனுக்குத் தூயகுல்லைத் தாரனுக்குச்
சோதிவடி வேலனுக்குச் சொற்கரம்ப னாரனுக்கு
—மங்களம்

குஞ்சரிம ணாளனுக்குக் குறவள்ளி கேள்வனுக்குக்
குன்றுதொறு மாடிவரும் தென்றமிழ்வி னோதனுக்கு
—மங்களம்

திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

# முருகன் திருநாமம்

சங்கரன் மகனே
சரணஞ்சண் முகனே
மங்கைய ரகனே
வரமருள் குகனே. 1

அம்பிகை பாலா
அரகர வேலா
கிண்கிணிக் காலா
கிளரனு கூலா. 2

ஐங்கரன் தம்பி
ஆளுடை நம்பி
இங்குயா னன்பி
னேத்துவென் நம்பி. 3

அரிதிரு மருகா
அறிஞர்கள் அருகா
ஒருதிரு முருகா
ஒளிமயிற் குருகா. 4

வீரனுக் கண்ணா
வேங்கடக் கண்ணா
ஈராறு கண்ணா
என்னிரு கண்ணா. 5

பன்னிரு வாகா
பாவியைக் காகா
கன்னியர் பாகா
கலைத்தமிழ்த் தியாகா. 6

ஆறிரு தோளா
அருணமலி தாளா
சேரெரி நாளா
திருவரு ளாளா. 7

பன்னிரு கையா
பதமரு ளையா
மின்னுமிழ் மெய்யா
வேன்முரு கையா. 8

கரம்பணி னாதா
கழறநன் னாதா
வரந்தரு தாதா
மனமிரங் காதா. 9

செந்தமிழ்க் குரவா
தேமலர்க் குரவா
அந்தமி லுரவா
அடியிணை தரவா. 10

கதிரையில் வாசா
கருணையுல் லாசா
அதிபவ நாசா
அரனரு ளீசா. 11

நல்லையிற் கந்தா
ஞானவின் பந்தா
வல்லயிற் குந்தா
மறுவிலின் பந்தா. 12

வேறு

இந்தணியுஞ் சுந்தரற்குக் குருவே
எங்குநிறைந் தின்பமருள் அருவே
அந்தமில மழகொழுகு முருவே
அன்பருக்க ருள்சுரக்குந் தருவே. 13

சூருட லறுத்தசுட ரயிலா
சோதிநட னக்கலப மயிலா
சேருயி ரிருட்கொளிசெய் வெயிலா
தேவருறை தென்பழனிச் சயிலா. 14

செந்தமிழ் கமழும்மணி வாயா
செந்திபரங் குன்றிலமர் நேயா
அந்தமவு ணர்க்கருளுந் தூயா
ஆதரித்த ழைக்கவரு வாயா. 15

அன்பருளச் செங்கமலத் தேனே
ஐயவுனைக் காணவலந் தேனே
துன்பழிசு டரிலைவேற் கோனே
தோகைமயி லேறுதம்பி ரானே. 16

எங்குமணக் குங்கடப்பந் தாராய்
இணையடியி ரண்டுமினித் தாராய்

தங்குமுளைத் தன்பிலரைச் சாராய்
சண்முககு கமுருகப் பேராய். 17

அண்டருக்கு வாழ்வுதரும் தேவே
அன்பரகத் தேமலரும் பூவே
கண்டருக்குஞ் சொற்குறத்தி கோவே
கதியருளுங் கற்பகப்பூங் காவே. 18

ஒன்னலனுக் கொண்பதங்கள் தந்தாய்
உயிர்களைப் புரந்தருளு மெந்தாய்
வன்னமர கதமயிலில் வந்தாய்
வைதவர்க்கும் நல்லருளு வந்தாய். 19

குஞ்சரி குறத்திமண வாளா
குன்றுதொ றுலாவுமலர்த் தாளா
மஞ்சரி வயங்குமணித் தோளா
மாவைநகர் மேவுமரு ளாளா. 20

விண்ணவர் பயங்கெடுத்த வீரா
வேதனைய ழிக்கும்நல்லை யூரா
வண்ணநட மரகதம யூரா
மன்றலணி செங்கடப்பந் தாரா. 21

கந்தவனக் கற்பகந்தீங் கனியே
கண்டவர்கா ணாததன்னந் தனியே
சுந்தரகு மாரவெனை யுனியே
துன்பறுக்க வந்தருள்வா யினியே. 22

ஆரருள் நவாவிநகர்ப் பூமி
அட்டகிரி மேவுகந்த சாமி
சீரருள் வழங்குமபி ராமி
செல்வவருட் சேவடியிற் சேமி. 23

தேவர்கள் வணங்குசேனு பதியே
சீரடிய வர்க்கழியா நிதியே
ஆவலைய ழிக்குநல்ல மதியே
அல்லலழித் தேயருள்வாய் கதியே. 24

வேறு

அரகர சிவசிவ முருகேசா
அரிமரு காசிவ முருகேசா
சரவண பவகுக முருகேசா
தணிகையில் வளரிள முருகேசா. 25

வரைபக வெறிதரு மயிலோனே
மரகத மணிநிற மயிலோனே
மருவிருள் மடிதரு வெயிலோனே
மனநிறை தரவரு மொயிலோனே. 26

குறமகள் மகிழ்வுற வருமழகா
கொடியபல் பிணிமிடி யழிகுழகா
அறநெறி யருணெறி யவைபழகா
அடியெனை விடுகிலுன் னருளழகா. 27

பரசிவ குருபர சண்முகனே
பழனியில் நிலைபெறு சண்முகனே

வரவர மயின்மிசை சண்முகனே
மதகரி மகிழ்தரு சண்முகனே. 28

அருவரை யழிவுற விடுவேலா
அலைகடல் பசையற விடுவேலா
வெருவரு மசுரற விடுவேலா
மிடிபிணி பொடியுற விடுவேலா. 29

கிணுகிணு கிண்கிணி யணிதாளா
கிளையொடு மமரர்கள் பணிதாளா
எணுமென திருவிணை யடிதாளா
இருண்மல மிடிபிணி முடிதாளா. 30

மணிவரை தருமுமை மகிழ்பாலா
வனிதைய ரிருவர்க ளனுகூலா
பணிபவர் வினைகுடி யொருகாலா
பயில்மிடி பிணியழி யிருகாலா. 31

கலகல மயில்மிசை வாராயோ
கடைவிழி யருளினித் தாராயோ
பலபல துயரையும் பாராயோ
பதவிணை தலைமிசைச் சேராயோ. 32

பயமுள கெடவருள் முருகோனே
பகைபிணி மிடியழி முருகோனே
செயசெய செயசெய முருகோனே
சிவசிவ சிவசிவ முருகோனே. 33

துயர்பல கெடவருள் முருகோனே
துணிவொடு மறிவருள் முருகோனே
செயசெய செயசெய முருகோனே
சிவசிவ சிவசிவ முருகோனே. 34

அருளொழு கிடுமறு முகநாதா
அமுதொழு கிடுதமி ழருள்போதா
அருமறை வணைகழ லணிபாதா
அரகர சிவசிவ குருநாதா. 35

பொருவரு மருமறை புகுகாதா
புலவர்கள் புகல்தமிழ் புகுகாதா
அருவினை யறமன முருகாதா
அரகர சிவசிவ குருநாதா. 36

**திருச்சிற்றம்பலம்**